# <u>RECORD OF DEPOSITION OF WITNESS</u>

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | O.S.No. 03 of 2026 | **DW1** | : | Cross |
| **Name** | நஜ்மா | **Husband Name** | : | ரிஸ்வான் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 12.03.2026 administered by District Munsif, Uthangarai.

**துவக்க நேரம் – 11.45 AM**

**<u>வாதி தரப்பு குறுக்குவிசாரணை:</u>**

1. எனக்கும் வாதிக்கும் நடைபெற்ற திருமணம் கடந்த 15.03.2020 தேதியில் ஊத்தங்கரை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவும் செய்யப்பட்டுள்ளது. என்று சொன்னால் சரிதான் தற்போது என்னிடம் காட்டப்படும் பதிவு சான்றிதழின் நகல்தான் எங்கள் திருமண பதிவு சான்று நகல் என்று சொன்னால் சரிதான். அந்த நகல் அசல் இல்லாததால் குறியீடு செய்யப்படவில்லை. வாதி எனக்கும் என்னுடைய குழந்தையின் வாழ்வாதாரத்திற்கும் கடந்த 11.03.2026 தேதியில் ஒரு தான செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் சொத்துக்களை தானம் படுத்தி எனக்கு ஒப்படைத்துள்ளார் என்று சொன்னால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் தான செட்டில்மெண்ட் ஆவணம் தான் அந்த ஆவணம் என்று சொன்னால் சரிதான். அந்த தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்றிட்டநகல் வா.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. திருமணம் நடைபெற்று இறுதியாக நானும் வாதியும் சாமல்பட்டி கிராமத்தில் வாதியின் வீட்டில்தான் வசித்து வந்தோம் என்று சொன்னால் சரிதான். நான் பிரசவத்திற்காக எனது பெற்றோர் வீட்டிற்கு சென்று அதன்

பின்னிட்டு இதுநாள் வரை வாதியின் வீட்டிற்கு திரும்பவில்லை என்று சொன்னால் சரிதான். நான் வரவில்லை என்பதால் வாதியும் அவரது பெற்றோர்களும் ஊர் பொதுமக்களும் என்னை சேர்ந்து வாழ அழைத்தனர் என்று சொன்னால் சரிதான். எனக்கு அவருடன் வாழ விருப்பமில்லை என்று நான் தன்னிச்சையாக முடிவு செய்து தனியாக வாழ்ந்து வருகிறேன் என்று சொன்னால் சரிதான்.

3. அதனால் தான் வாதி பலமுறை அழைத்தும் நான் என் விருப்பப்படி எனது தாயார் வீட்டில் வாழ்ந்து வருகிறேன் என்று சொன்னால் சரிதான். நான் வாதியின் மனைவியாக உள்ளதால் சட்டப்படி நான் அவருடன் சேர்ந்து வாழ்ந்து இருக்க வேண்டும் அவ்வாறு நான் சேர்ந்து வாழாத காரணத்தால் அவர் கோரியபடி விவாகரத்து வழங்க கடமைப்பட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். எனக்கு சேர வேண்டிய மகர் தொகை என்னுடைய சீர்வரிசை என்னுடைய பொருட்கள் அனைத்தும் என்னிடமேதான் உள்ளது, வாதியிடம் எனக்கு சேர வேண்டிய பொருட்கள் எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான். தற்போது வாதி எங்களுக்கு தான செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் ஒப்படைத்துள்ள சொத்தின் சந்தை மதிப்பு தற்போதைய நிலவரப்படி சுமார் ஐந்து கோடி இருக்கும் என்று சொன்னால் சரிதான்.

4. அவ்வாறு வாதி எங்களுக்கு சொத்தை கொடுத்துள்ளதால் அவரிடம் இனிமேல் நானும் எனது மகனும் ஜீவனாம்சமாகவோ வேறு அவருக்கு பாதிக்கப்பட்ட சொத்துக்களில் பங்கு உரிமையோ கோருவதில்லை என்று ஒப்புக்கொண்டுதான் நாங்கள் அந்த சொத்தை தானமாக பெற்றுள்ளோம் என்று சொன்னால் சரிதான். நான் சட்டப்படியான

மனைவி என்ற முறையில் அவருக்கு கிடைக்க வேண்டிய எதுவும் செய்யாமல் இருந்து வந்ததால் அவர் விவாகரத்து கோரியுள்ளார். அதனால் அவர் கோரியபடி விவாகரத்து வழங்க வேண்டும் என்று சொன்னால் விவாக்கரத்து வழங்க எனக்கு ஆட்சேபனை இல்லை. நான் என்னுடைய பதில் உரையில் தாவாவிற்கு மாறாக சொல்லி உள்ள சங்கதிகள் அனைத்தும் பொய் என்று சொன்னால் சரியல்ல.

குறுக்குவிசாரணை முடிக்கப்பட்டது. மறுவிசாரணை இல்லை.

**முடிவு நேரம் – 11.58 AM**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- XXXXX

District Munsif(FAC),
Uthangarai.